**அனுப்புநர்**

எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப.,
கல்லூரிக் கல்வி ஆணையர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 15.

**பெறுநர்**

1. பதிவாளர்கள்,
அனைத்துப்
பல்கலைக்கழகங்கள்.

2. முதல்வர்கள்,
அனைத்து அரசு / அரசு
உதவிபெறும் மற்றும்
சுயநிதிக் கலை மற்றும்
அறிவியல் கல்லூரிகள்.

ந.க.எண். TNDCE/1713/2025–எம்1, நாள்.03–09–2025

ஐயா/அம்மையீர்,

பொருள்– கல்லூரிக் கல்வித் துறை – 2025–26ஆம் கல்வியாண்டிற்கான இளநிலை/முதுநிலை பட்டப்படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கை நீட்டிப்பு – அறிவித்தல் – தொடர்பாக.

--------

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2025–26ஆம் கல்வியாண்டிற்கான இளநிலை/முதுநிலை பட்டப்படிப்பிற்கான மாணாக்கர் சேர்க்கை 07.05.2025 மற்றும் 20.06.2025 முதல் நடைபெற்று வருகிறது. விண்ணப்பம் பதிவு செய்ய தவறிய மாணாக்கர்களுக்காக மாணாக்கர்கள் நலன் கருதி மீண்டும் www.tngasa.in இணையதளம் வாயிலாக இளநிலை/முதுநிலை மாணாக்கர்கள் விண்ணப்பிப்பதற்கு உரிய வகையில் 30.05.2025 மற்றும் 01.08.2025 முதல் தற்போது வரை போர்டல் திறந்த நிலையிலேயே உள்ளது.

தமிழக அரசின் உயர்வுக்கு படி திட்டத்தின்படி, உயர்கல்வியில் மாணாக்கர் சேர்க்கையை அதிகப்படுத்துவதற்காக தற்போது வரை மாணாக்கர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மாணாக்கர்கள் கல்லூரிகளில் உள்ள காலியிடங்களில் சேருவதற்கு ஏதுவாக 2025 –26ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை 30.09.2025 வரை நீட்டிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

E. SUNDARAVALLI

COMMISSIONER